ஸ-ங்கள், மானுடர்கள், மிருகங்கள, பட்சிகள், கிருமிகள், மரம் செடி புற்பூண்டுகள்-என்பவை. ஜராயஜ, அண்டஜ, சுவேதஜ, உற்பிஜங்களென்கிற நான்குவிதங்களான பூதசமூகங்கள் அவ்வப்பிராணிகளுக்கு உபயோகமான அன்னபானதிகள், கடபடாதி சதசத்பதார்த்தங்கள் ஆகிய இத்தன்மைத்தப்பிரபஞ்சமானது ப்ரம்மாவாயிலாக முறை முறையே யுண்டானதாக விவகாரத்திற் சொல்லப்பட்டிருந்தபோதிலும் ஊர்ணநாபியென்னும் சிலந்திப்பூச்சியானது தன்சரீரத்திலிருந்து நூலையுண்டுசெய்வதுபோல், ஈசுவரன் தானே உபாதானகாரணமும், நிமித்தகாரணமுமாயிருந்து பிரபஞ்சரூபமானுனென்பது சாத்திரங்களின் ஒட்டேஅபிப்பிராயமென்று தெரிந்து கொள்ளுக-

(நான்குவித பூதகிராமங்களாவன)

1. ஜராயுசமென்பது=கருப்பையிலிருந்துண்டாகும் தேவர், மனிதர் நாற்கால்மிருகங்களும்-
2. அண்டஜமென்பது= முட்டையிலுண்டாம் பட்சிகளும், கிருமிகீடங்களும், சலசந்துக்களுமாம்.
3. சுவேதஜமென்பது=வேர்வையிலுண்டாகும் பேன், மூகட்டுப்பூச்சி முதலியவைகளாம்.
4. உற்பிஜஜமென்பது=வித்து, வேர், கொம்பு கொடி கிழங்கு இவைகளிலுண்டாகும் செடி கொடி மரம் புலபூண்டு முதலியவைகளுமாம்.

(இன்னுமவரும்பின்)

"[illegible]"

[illegible]

[illegible]	௦	க	௦
[illegible]			
[illegible]	௦	க	௦
[illegible]			
[illegible]	உ	௦	௦
[illegible]	௦	கஉ	௦
[illegible]	௦	அ	௦
[illegible]	௦	ச	
[illegible] (ஸடீகம்)	௦	க	௦
[illegible]	௦	எ	௦

[illegible]கீபகாய-

ஸ்ரீராமாயண தாத்பர்ய ஸங்க்ரஹ: [illegible]	௦	உ	௦
[illegible]	௦	உ	௦
[illegible]	க	௦	௦
[illegible]	௦	உ	௦
[illegible]	௦	க	௦
[illegible]	௦	ச	௦
[illegible]	௦	க	௦
[illegible]	௦	௦	கூ
[illegible]	௦	௦	கூ
[illegible]	௦	௦	கூ
[illegible]	௦	அ	௦

[illegible]

[illegible]	௦	ரு	௦

[illegible]

[illegible] நாடகம்	௦	கூ	௦
[illegible]	௦	கூ	௦
[illegible]	௦	கூ	௦
[illegible]	௦	க	௦
[illegible]	௦	ரு	௦
[illegible]	௦	க	௦

Printed and Published for the Proprietor at the Brahmavidya Press. Chidambaram.

ப்ரஹ்மவித்யா.

ப்ரம்மவித்தியாபத்திரிகை

பிரதி இங்கிலீஷ்மீ ௧௫. உ சிதம்பரத்திற் பிரசுரம் செய்யப்படும்

புத்தகம் - க.] கஅஅஎ-ஹு ஜனவரி-மீ ௧௫. [இலக்கம் - அ.

[illegible]				[illegible]
[illegible]	க	௰உ	,,	உ ச ,,
[illegible]	க	,,	,,	க ச ,,
[illegible] ,,		கூ	,,	,, ௰ ,,
[illegible] ,,		ரு கூ	,,	ச ,,

சந்தா விவரம்

		இந்தியாவிற்கு-			இலங்கைக்கு-		
வரு	1 - இ	1	12	0	2	4	0
[illegible]	6 - இ	1	0	0	1	4	0
[illegible]	3 - இ	0	9	0	0	10	0
காபி	1 - இ	0	3	6	0	4	

விஷயா:	[illegible]
[illegible]	௨௱௰௪
[illegible]	௨௱௰௬
[illegible]	௨௱௨௰
[illegible]	௨௱௨௰௨
[illegible]	௨௱௨௰௫
[illegible]	௨௱௨௰௫
விவாத:	௨௱௨௰௬

விஷயங்கள்	பக்கம்
ஸம்ஸ்கிருதபாஷை.	௨௱௰௩
ஆத்மாவும், சரீரமும்.	௨௱௰௫
ஸ்மார்த்தப் பிராமணர்களுடைய உட்பிரிவு-	௨௱௰௯
ஸ்ரீமத் சங்கராசாரியசுவாமிகள் பூஜாவிஷயம்	௨௱௨௰
இந்துதத்துவபிரபாவம்.	௨௱௨௰௧
கலியுகவித்தை	௨௱௨௰௧
சுழுத்தியின்கண்உலகுண்டாவென்பது.	௨௱௨௰௪
சம்பாஷிணை	௨௱௨௰௫

இஃது சிதம்பரம் ப்ரம்மவித்தியா ப்ரேஸ்தலைவரால் பதிப்பித்து வெளிப்படுத்தப்பட்டது-

மதம்.

வேதத்தையே மூலப்பிரமாணமாகக்கொண்ட நமது மதஸ்தர்கள் பற்பல பேதங்களுண்டாகி, பிரமாணத்தை அப்பிரமாணமாகவும், அப்பிரமாணத்தைப் பிரமாணமாகவும் கொண்டு, பலபிரிவுநூல்களை உண்மையயாராயாதவரை மருட்டிப் பகைமூட்டிவிடுகின்றனர்- மத துரபிமானிகளால் வந்திருக்கும் கெடுதிகள், இத்துணையெனக் கூறற்பாற்றோ? முன்பினுள்ள முரண்களைத் தக்கவரிடங் கேளாதும், கூறுபவரைத் துரபிமானத்தால் வைதும் வருவதால் உண்மை வெளியாவதெங்ஙனம்? இவர்க்கு உண்மை வெளியாகவேண்டின் வைதல் ஆவசியகமன்றே- "தாம் பிடித்தமுயலுக்கு மூன்றேகால்" என்பதற்கிணங்க, தாம் அபிமானித்ததற் கொருசிறிதுங் குறைவுறாதிலையாக்க, அசத்தியத்தைச் சத்தியமாக வரைந்தும் வாதாடியும் உபந்நியசித்தும் வருவது, கடவுளிடத்து நிஜமான பக்தியும் பயமுமுள்ளவர்க்கு ஒருபோது மிராதென்பதே துணிபு- எம்மதத்தவரேனும் உண்மையும் பத்தியுமுளராயின், அவர் மனோசாக்ஷிக்கு மாறுபாடின்றிக்கூறுவர்; பிறர் மதிக்க வாசாகயிங்கரிய வேடம்பூண்டு வெளிவந்தோர அதற்கு மாறாகக்கூறுது என்செய்வர்? இவராலேயே புறமதஸ்தர் அவமதிக்கவிடமாயிற்று- சிலர், தமது துரபிமானத்திற்கு ஆனி வருமென்றஞ்சி "அந்நூலைப்பாராதே, யிந்நூலைப்பாராதே," என்றும், தாம் குறிக்கும் நூல்களையே பாரெனவும் சூதாய்ப்போதிக்கும் துர்ப்போதனைகளைக்கேட்டு மயங்கி அங்ஙனமே பார்த்துப் பிறர்கொள்கைகளைச் சிறிதும் அறியாமலே வையத்தொடங்கி, மகாத்துமாக்களையெல்லா மிகழ்ந்து நிந்தியாநின்றனர்- பற்பலமத நூல்களையும் ஆராய வலியின்றேல் புறமதங்களைத் தூஷித்தல் தக்கதன்று; வலியுளதேல் அபிமானத்தை யொழித்து அதது உணர்ந்தார்பால் கேட்டுத் தர்க்கித்துத் தேறியதை நியாயவாயிலாகக் கூறக்கடவர்- இங்ஙனம் புரிவாரேல் இந்துமத மிவ்வாறு குறைவடைந்திலது- பலவேறுபட்ட உள்மதத்தவர்கள் தத்தம் மதமே உண்மையென்று நாட்டி நூல்களியற்றுவாராயின் எதைச் சரியென ஒத்துக்கொள்வது? ஒவ்வொருவரும் தமதுமுன்னோரியற்றியதே சத்தியமெனின் ஒன்றையே வேறு வேறாகக்கூறும் யாவுமே சரியென அங்கீகரித்த லெங்ஙனமாகும்? இவற்றிலுண்மை யிது வெனப் பாரபக்ஷமின்றித்தெளிதல் ஆவசியகம்- இங்ஙனமின்றித் துரபிமானத்தோடு தங்கொள்கைக்கு மாறு வரப்படாதெனக்கருத்துக்கொண்டு நோக்குவார்க்கு உண்மை வெளியாவது யாங்ஙனம்?

துரபிமானத்தால் உண்மையை யின்மையாகவும், இன்மையை உண்மையாகவும் சித்தாந்தம் செய்துகொண்டு, முற்றும் வேறுபட்ட மதஸ்தரோடு வாதம் புரியின் எங்ஙனம் வெற்றிபெறுவர்? கற்பனையைக் கற்பனையெனவும், யதார்த்தத்தை யதார்த்தமெனவும் கூறி வாதஞ்செய்யின் வெற்றிபெறத் தடையிலது- அங்ஙனமின்றித் தாமே அயதார்த்தத்தை யதார்த்தமென்றும், யதார்த்தத்தை அயதார்த்தமென்றும் சித்தாந்தம் செய்துகொள்ளின், புறமதத்தாரால் அவமானத்துடன் தோல்வியுமடையத் தடையுளதோ?

சாத்திய மிஃதென்றும், சாதன மிஃதென்றும் உள்ளபடி உணர்ந்தாலன்றி நமது சமயம் நிலைபெறாது- அங்ஙனம் நிலையாகாவிடினும் ஆதக, நமது கொள்கை மாறப்படாதெனும் வைராக்கிய சீலர்க்கு யாமுரைப்பதியாதுளது? அவர் நமது சமயவிருத்தியை நாடினவரன்றென்பதன்றி வேறொன்றுங் கூறகில்லேம்- இது நிற்க, உண்மையை நோக்கும் இந்துமத சகோதரரே! மதவாராய்ச்சிபுரிந்த பல்லோர்பால் சுருதியுக்தி அனுபவசகிதமாகப் பல்கால் விசாரணைசெய்து பின்பு தெளியக்கடவீர்- துரபிமானிகள் இன்னாரென முன்னர் உணர்ந்து அவர்பால் செல்லாதொழிதல் நன்று- அங்ஙனம் புரியாது சித்தாந்தார்தஞ் செய்து இன்ன சித்தாந்தியென வெளியுங்காட்டி, பின்பு அதை மாற்றிக்கொள்வது கஷ்டசாத்தியமாகிப் பொய்யை மெய்யாகவும், மெய்யைப் பொய்யாகவும் மனச்சான்றுக்கு நேர் விரோதமாகப் பேச நேரிட்டு இங்ஙனம் பேசுவது நீதியன்றென வுணர்ந்தும் மானம்போவதுபற்றி அங்ஙனம் பேசவும் சம்பவிக்கிறது. உற்று நோக்குழி இவ்வாறான துரபிமானிகள் அநேகருளர்- அவரின்னாரென் உணர்தல் ஆவசியகமாகும்.

நமது சமய சிரசில் அநேக ரகசியங்கள் இருக்கின்றன; அவற்றை யிங்குள்ள சில துரபிமானிகள் மறுத்துரைக்கின்றதோடு முற்றும் நிந்திக்கின்றனர்- புறதேசவாசிகளோ உண்மையைக்கண்டு பிரசாரம் செய்து வருகின்றார்கள்- ஆங்கிலேயபாஷையில் வல்ல நம்மவர்க்கு மேற்படி ரகசியங்களைப் பூர்வபக்ஷ மதவாதிகள் யுக்திக்குப் பொருத்தமாய்க்கூறாது, பின்பு பூர்வபக்ஷப்படும் சித்தாந்தங்களைக் கூறுவதில், அவர் வெறுப்புற்று அவிசுவாசங்கொள்கின்றனர்- மேதாவிகளான அவரை, தக்க சமாதானம் சொல்லித்திருப்பாது வாளா நிந்திடபதில் பயன் யாது?

இதுகாறும் கூறியதின் கருத்து யாதெனின், நமது மதத்தின் உண்மையை உண்மையாகவே உணர்தல்வேண்டுமென்பதே- யாமின்னமதம் குற்றமுளது, இன்னமதம் குற்றமிலது எனக்கூறினேமல்லேமாகலின், அறிவுடையார் சத்து இன்னதென வாராய்ந்து தெளிவாராக.

உண்மைநாடுவோன்

குறைவுகள்.

இத்தேசத்தார்க்குப் பிழைப்பு தினே தினே மட்டுப்படுகின்றது; வரிகளோ கணக்கில்லை; நாட்டுப்புறத்து ஏழைகள் படும் துன்பம் சொல்லிமுடியாது; ஒற்றுமையும் தேசாபிமானமுமில்லை; பட்டணவாசங்களில் மாத்திரமன்றி வெளியில் கல்வி வெகு சூஜ்ஜியம்; பத்திரிகைகளை லக்ஷியம்செய்து படிப்பாரில்லை; மத சித்தாந்தம் தெரியாமல் மயங்குகின்றனர்; கிறிஸ்துமதத்தில் நமது ஜனங்கள் இன்றும்போய்க்கொண்டிருப்பதால் நமது மதஸ்தர்தொகை குறைந்துவருகின்றது; கவர்னமெண்டார் இருக்கும் கல்விச்சாலைகளையும் குறைக்கக்கருதுகின்றனர்; தொழிற்சாலைகளிங்கில்லாமையால் ஆங்கிலேய தேசத்திலுள்ள தொழிற்சாலைகளினின்றே இந்துதேசத்திற்கு வேண்டும் எல்லாச்சாமான்களும் வருகின்றன; இதனால் அத்தேசத்தார்க்குப் பிழைப்பும் இத்தேசத்தார்க்கு அஃதில்லாமையுமாயின- இவர் பலவீனர்; தைரியமில்லாதவர்; அந்நியர்க் கடிமைப்படுபவர்; சூரரல்ல; வீரருமல்ல; சபைசேர்ந்து தம் நஷ்டங்களை நிவர்த்திசெய்துகொள்ள வகை அறியாதவர்; இவைபோல எத்தனையோ குறைவுகளுளவாயிருக்கின்றன- இவற்றை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பரிகாரந்தேடிக்கொள்வது அத்தியாவசியம்.

குறைகூறும் குற்றவாளி.

[illegible]

[illegible]

[illegible]

திவான் ஜிஆபீஸ்றயிட்டர் திருவனந்தபுரம்

ப்ரம்மவித்தியா.

இப்பெயர் தரித்துலாவும் 4. பாரங்கொண்ட சம்ஸ்கிருத தமிழ் மாதாந்தரப் பத்திரிகை, தோன்றிச் சிறிதுகாலமேனும் பலர் கரங்களினும் நடைபெற்றுவருகின்றதைக் கேட்க மிகக்களிப்புற்றேம்- தொடக்கத்தில் வெறுப்புற்றவரும் இப்போது அருமைபாராட்டுகின்றனர்- இப்படிப்பட்ட பத்திரிகை யொன்றிருப்பது யாவர்க்கும் சந்தோஷம்- இதில் சுருதி, ஸ்மிருதி, புராணாதிகளின் உண்மை வெளியாகித் தத்துவவிசாரம் செய்வதற்கு மிக்க சாதனமாயிருக்கின்றது; எது எப்படியோ அதை அப்படியே கூறுகின்றது; உள்ளதை யொளித்து மாறிப்பேசுபவர்க்கு இது தலைச்சுமையாயிருக்கிறது- இதுநிற்க, இதை விருத்திசெய்ய ஒவ்வொரு மதாபிமானிகளும் முன்னிற்கவேண்டும்- இப்போதிருக்கும் 4- பாரத்தை 8- பக்கமாக்கினேமாயின் இன்னும் எவ்வளவோ விஷயங்கள் தெரிந்துகொள்ளலாம்- கையொப்பக்காரர் பலரும், இதுவிஷயததில் முயன்று தத்தம் அபிப்பிராயங்களைத் தெரிவிப்பாரானல், பத்திராதிபர் தக்க மறுமொழி கூறுவர்; அன்றிச் சந்தா இவ்வளவெனவு முரைப்பர்- அதற்குமேல் நாம் யோசிக்க இடமுண்டு. எங்ஙனமாயினும் ஒரு வருஷம் பொறுத்தே இந்த யோசனை செய்யவேண்டுவது- நம்மவர் நமது மதமறியாது புறமதத்தில் செல்லுமிக்காலத்து; இப்பத்திரிகையைப் பிரசுரஞ்செயயும் (ஸ்ரீ ஞானசம்பந்தசுவாமிகள் மரபிலுதித்த) லோகோபகார மூர்த்திகளான ப்ரம்மஸ்ரீ கு. ஸ்ரீநிவாசசாஸ்திரியாரவர்கட்கு யாம் புரியும் கைம்மாறு யாதிருக்கிறது? நமது வணக்கமுள்ள வந்தனமே- இவர் மாசம் (50) ரூபா வேதனமாக வரும் போதகாசிரியர் தொழிலையும் விட்டு எங்கெங்கும் சென்று பிரசங்கம் செய்து வரும் சங்கதியைக்கேட்க மனக்குழைகின்றது- பத்திரிகை நீடூழி வாழப் பரமேஸ்வரனைப் பிரார்த்திப்போமாக.

ஓர் கையொப்பக்காரனன ஏழை.

கவனிப்பு.

சென்ற டிசம்பர்மீ பத்திரிகையில் "வருகிற ஜனவரிமீ 30.உக்குள் சந்தாத்தொகையை அனுப்பிவிடாமலிருக்கும் கனவான்களுககுப் பத்திரிகை அனுப்பப்படமாட்டா" தென்று தெரிவித்திருந்தோம. அதைக்கண்டபின்னரும் சில கனவான்சள் சிறிதேனும் கவனிக்காமலேயிருக்கிறர்கள். இன்னும் பாக்கியாயிருப்பவர்கள் சுமார் 50.வரையில் இருக்கின்றது. ஆனல், அவர்சளிற் பலர்க்கு கனத்தைநோக்கியே அனுப்பப்பட்டபடியால் இனியாவது சிறிது கவனித்துச் சீககிரத்தில் அனுப்பிவிடுவாரென்று கருதி, இம்முறை நிறுத்திவிடாது அனுப்பியிருககிறேம்.

பததிராதிபர்.

ப்ரஹ்மவித்யா.

ப்ரம்மவித்தியாபத்திரிகை

பிரதி இங்கிலீஷ்மீ ௩௰ உ சிதம்பரத்திலிருந்து பிரசுரம் செய்யப்படும்

புஸ்தகம்க கஅஅஎ௵ மார்ச்சு மீ ௩௰ உ [இலக்கம். ம

[illegible] [illegible]

[illegible] [illegible]

[illegible] [illegible]

[illegible] [illegible]

[illegible] [illegible]

[illegible] [illegible]

[illegible] ௬௰

விஷயங்கள்	பக்கம்
குதர்க்காசலகுலிசம்	[illegible]
சம்பாஷணை [முன்தொடர்ச்சி]	[illegible]
உபந்நியாஸ (முன்தொடர்ச்சி)	[illegible]
மதமும் அதின்பிரயோசனமும்அதின் ஆசிரியரும் [தொடர்ச்சி]	[illegible]
ஓர்உபந்நியாசம்	[illegible]
ஆகாயவாதம்	[illegible]
அனுபந்தத்தில் சத்துவ விவேசினியார் விடைக்கு மறுவிடை	

சந்தாத்தொகைகளை முன்பணமாகவே மணிஆர்டர் மூலமாவது அல்லது, ரூபாய் ஒன்றுக்கு ஒருஅணவெட்டம் சேர்த்து லேபில்களாயாவது,சிதம்பரம் ப்ரம்மவித்தியா ஆபீஸ் மானேஜருக்கென்றனுப்பலாம்

சந்தா விவரம்

	இந்தியாவிற்கு				இலங்கைக்கு		
௵	-1இ	1	12	0	2	4	0
மா	6.இ	1	0	0	1	4	0
மு	3 இ	0	9	0	0	10	
காபி-1	இ	6	3	6	0	4	0

குறிப்பு

ஈரோடுஓர்சித்தாந்தி,, இம்முறை "குதர்க்காச லகுலிசத்திற்கு விடைக்குமேல்விடை என்னும்விஷயத்தைப்பற்றி- முன்குதர்க்காசலகுலிசம் எழுதிய,'சாமக்குளம் வெங்கடரமணதாஸரவர்களே,,!எழுதியிருப்பதால், தாமெழுதியது அடுததமுறைத்தடையன்றிப்பிரசுரம் செயயப்படும்

கொள்ளேகாலம் நேசர் எழுதியது வெகுவிருத்த தாதலால், ஒரு சமயத்தில்அதவெளியிடட்டடும்

விளம்பரம்

ரிபுகிதை-

இப்புத்தகம் சென்னை பெத்து நாயக்கன்பேட்டை ஏகவல்லி அம்மன் வீதி மேலண்டைவாடை. 6. ெந- வீட்டில் அத்வைத விவேக சமாஜத்தி லொருவரான தி. ரே. திருவெங்கடபிள்ளை அவர்களிடம் ரூபா. 2ற விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

சிதம்பரம்
ப்ரம்மவித்தியா யந்திரசாலையில்
விற்கப்படும் புத்தகங்கள்.

சர்மிஷ்டாவிஜயம்	,,	௬	,,
பகவத்கீதார்த்த தீபிகை	௨	,,	,,
ஆச்சரிய தர்ப்பணம்	க	அ	,,
அஷ்டாங்கயோகம்	,,	௫	,,
ஆரியாதண்டகம் / லக்ஷ்மிஸ்தோத்திரம்	,,	க	,,
மகேஸ்வரதண்டகம்	,,	க	,,
சங்கர சரித்திரம்	,,	,,	௬
ஆத்மாவும், சரீரமும்-	,,	க	,,
சகாதேவசாஸ்திரம்	,,	க	,,
மனுமுறைகண்டவாசகம்	,,	௨	,,
மாதர்நீதி	,,	௬	,,

... சிதம்பரம் ப்ரம்மவித்தியா ப்ரெஸ்தலைவரால் பதிப்பித்து வெளிப்படுத்தப்பட்டது